2015 செப்டம்பர் 1]

192—

மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம்

***28546—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணைப் பகுதியில் மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணைப் பகுதியில் மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் அன்னையே! வரலாற்றுத் தலைவியே! தரணி போற்றும் தங்கத்தாரகையே! ஏழைகளின் ஒளி விளக்கே! அம்மாவின் பக்கம் மக்கள்; மக்களின் பக்கம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக நாளும் உழைக்கும் சாதனைத் தலைவியே! "மக்களால் நான்; மக்களுக்காக நான்" என வாழும் தாய் உருவில் அவதரித்த தமிழர் குல தெய்வமே! தமிழ் இனத்தை வாழ்விக்கும் தன்னிகரில்லா தலைவியே! மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

[2015 செப்டம்பர் 1

மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணைப் பகுதியில் மீன் பண்ணை, மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு சாத்தியகூறு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினாலும்கூட, அவர் அந்தப் பகுதிக்கு வருகை தந்துள்ளார். அங்கு இருக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் அவருக்குத் தெரியும். உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணைப் பகுதியிலே உள்ள மீன் பண்ணைகளில், ஆண், பெண், தாய் மீன்களைத் தனியாக வளர்த்து, அதைக் குறிப்பிட்ட காலக்கட்டத்தில், ஏப்ரல் முதல் மே மாதம் வரை இனப்பெருக்கம் செய்து, மீன் பண்ணைகளில் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து, நீர்த்தேக்கத்தில் இருப்பு செய்வது என்பது வழக்கமாக இருந்து வருகிறது. தற்சமயம் உற்பத்தியில் கூடுதலாக இருக்கக்கூடிய மீன்குஞ்சுகளை, திருப்பூர், கோவை மாவட்டங்களில் உள்ள குளம், குட்டைகளில் வளர்ப்பதற்கு அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்படுகிறது. ஆனால், மீன் வளர்க்கப்படும் குளங்களை ஏலம் எடுப்பவர்களுக்கு மீன் வளர்ப்பு பற்றிய தொழில்நுட்பம் தெரிவதில்லை. இதுபோன்ற மீன் வளர்ப்புப் பயிற்சியை விவசாயிகளுக்கு அரசு குறுகிய காலப் பயிற்சியாக அளித்தால், மீன் உற்பத்தி அதிகரித்து, உள்நாட்டு வளம் பெறுவதற்கு வாய்ப்புள்ளது. இதற்கான வாய்ப்புகள், இடவசதிகள் மடத்துக்குளம் பகுதியிலே, திருமூர்த்தி அணைப் பகுதியிலே உள்ளன. எனவே, அரசுமூலம் மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் கட்ட நிதியொதுக்கீடுசெய்து, பயிற்சியாளர்களை நியமித்து, மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமூர்த்தி அணையில் துணை மேலாளர் அலுவலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மீன்பிடிப்பு மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி பணிகளை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமே, மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களைக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. தற்போது திருமூர்த்தி அணைப் பகுதியிலே ஆறு பங்கு மீனவர்களைக் கொண்டுதான் மீன்பிடிப்புப் பணியிலே ஈடுபட்டு வருகின்றனர். திருப்பூர் மாவட்டத்திலே, மொத்தம்

2015 செப்டம்பர் 1]

42 மீன் வளர்ப்பவர்கள் உள்ளனர். இவர்களில் 27 மீன் விவசாயிகளுக்கு, மீன்குஞ்சுகளை வளர்த்தெடுத்தல், வண்ண மீன் வளர்ப்பு குறித்த பயிற்சிகள் மீன் வளத் துறைமூலம் வழங்கப்பட்டு உள்ளன. மேலும், திருமூர்த்தி அணைப் பகுதியில் குறைந்த எண்ணிக்கையில் மீன் வளர்ப்பு உள்ளதால், தற்போது, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் தனியாக மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்க சாத்தியகூறுகள் இல்லை. மீன் வளர்ப்புப் பணிகள் தொடர்பான பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வேண்டி தொடர்புகொள்ளும் மீனவர்களுக்கு, தமிழ்நாடு மீன் வளர்ப்புக் கழகம் துணை மேலாளர் அலுவலகம்மூலம் தக்க பயிற்சிகளை வழங்க, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. அரசுமூலம் கடற்கரை மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பதுபோல, கிராமப்புற, உள்நாட்டு மீனவர்களுக்கும் மீன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பதன்மூலம், பசுமைப் புரட்சி இருப்பதுபோல, நீலப் புரட்சி–*Blue Revolution *மேலும் சிறக்க வாய்ப்புள்ளது. இங்கு வண்ண மீன் பொருட்காட்சியகம் உள்ளது. ஆகவே, மீன் வளர்ப்புப் பயிற்சிமூலம் உள்நாட்டு உணவு மீன்களையும், அழகிற்காக வளர்க்கப்படும் வண்ண மீன்களையும் அங்கு வளர்க்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் அங்கு மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமூர்த்தி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் ஒன்று இயங்கி வருகிறது. அதுதவிர, தேசிய*

மீன்வள அபிவிருத்திக் கழக நிதியாதார உதவியுடன், வண்ண மீன் உற்பத்தி மையம் அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. திருமூர்த்தி அணைப் பகுதியிலே 10 பங்கு மீனவர்கள் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது, அந்த 10—ல் 4 குறைந்து, ஆறு பங்கு மீனவர்கள் மட்டுமே மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு மீன் பங்கு என்பது, இருவர் அல்லது ஒரு கணவன், மனைவி சேர்ந்திருப்பதாகும். இந்தக் குறைந்த அளவிலே மீனவர் உள்ள திருமூர்த்தி அணைப் பகுதியில், புதியதாக மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

ஆவின் பாலகம்

***53554—திரு. க. மனோகரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற எண்ணத்தின் அடிப்படையில், தமிழக முதல்வராக நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, என்னுடைய திருத்திய பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு தெரிவிக்க விழைகின்றேன்.*